**தலைப்பு 221 - தொழில் திணைக்களம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 221 - தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தொழில் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தொழில் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில் திணைக்களத்தினால் 2024 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்த தொகை மாதாந்தம் இலங்கை மத்திய வங்கியின் மூலம் மீள் நிரப்பல் செய்யப்பட்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் அவ்வாறு மீள் நிரப்பல் செய்யப்பட்ட ரூபா 967,027,707 ஆன தொகை வருமான தலைப்பில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் வருமானமாக தவறான பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்தின் பணிகளுக்காக ஒதுக்கீடுகளின் மூலம் செய்யப்பட்ட செலவுகள் இலங்கை மத்திய வங்கியின் மூலம் மீள் நிரப்பல் செய்தல் மற்றும் அவ்வாறு மீள் நிரப்பல் செய்யப்பட்ட தொகை தொழில் திணைக்களத்தின் குறித்த செலவு விடயங்களில் மிகைக் கட்டணமாக்கப்பட வேண்டிய போதிலும், அந்த முறைமை பின்பற்றப்படாத காரணத்தால் 2024 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 967,027,707 ஆன செலவு ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவுகளாக மீண்டும் அறிக்கை விடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(இ) மூலதனச் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டில் 221–2–4-2106 செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,777,444 ஆன கணனி மென்பொருள் திணைக்களத்தில் சொத்துக்கள் கொள்வனவு செய்தலாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிக் கூற்றுகளில் சொத்துக்களாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணைக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு முடியாது காணப்படுகின்ற மீளாய்வாண்டின் இறுதியில் சேவையைக் கைவிட்டுச் சென்ற, சேவை நிறுத்தப்பட்ட மற்றும் சேவையிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,914,316 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 384,060 ஆன 6 மீதிகள் 10 வருடங்களைக் கடந்தவை ஆகும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பது,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 3 செலவின விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 192,500,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்து மீளாய்வாண்டினுள் எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் நூறு சதவீத ஒதுக்கீடும் மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீடுகள் வருடத்தினுள் செலவிடப்படாமை தொடர்பான காரணம் தெளிவுபடுத்தப்படும் என்பது. | மதிப்பீடுகள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | 14 செலவு விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,157,501,540 ஒதுக்கீடுகளில் மீளாய்வாண்டு இறுதி வரையில் ரூபா 258,900,994 மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த மீதி 44 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மீதிகளுக்கான காரணம் தெளிவுபடுத்தப்படும் என்பது. | ஒதுக்கீடுகள் உச்சபட்சமான வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

| | | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | (i) | 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | திணைக்களத்துக்குச் சொந்தமான 87 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் 80 வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 07 வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 | திணைக்களத்துக்குச் சொந்தமான பொருளாதார ரீதியில் பலனற்றதான் நிலைமையில் உள்ள வாகனங்கள் இனம் காணப்பட்டு கைதவிர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை அகற்றுதல் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் 2025 ஜூலை 04 ஆம் திகதி மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது. | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 செப்டம்பர் 27 ஆம் திகதிய 2142/90 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி. | வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற்சாலைகளை புதிதாகப் பதிவு செய்தல் செயல்முறையினை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை தடுக்கப்படும் என்பது. உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக களப் பணி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தக் கூடிய எண்ணிக்கை 08 பேராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது. | வர்த்தமானியின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் விலைக்கேள்வி வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 24,313,744 ஆக இருந்ததுடன், அந்த மீதியினுள் ரூபா 16,327,781 தொகையானது 2 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்த மெஹவர பியச கட்டட நிர்மாணிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்பு என்பது வெளிப்பட்டது. | உரிய பிரிவுகளை விசாரிப்பதனால் இது தொடர்பான மேலதிகமாகத் தெளிவுபடுத்திக் கொண்டு இறுதி பதிலினை வழங்க வேண்டும் என்பது. | மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தொழில் திணைக்களத்தின் 6000-0-0-23-0-58 இலக்கம் கொண்ட பொது வைப்புக் கணக்கினுள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதியாக ரூபா 821,969,675 காணப்பட்டதுடன் 2015 இற்கு முன்னர் காணப்பட்ட EPF இல் (இழப்பீடு மற்றும் பணிக்கொடை) மொத்தம் ரூபா 7,022,106 தொகையினைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு | 96 வைப்புகளைத் தீர்த்தல் தொடர்பில் திணைக்களம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்பது மற்றும் அந்த தீர்மானத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மீதிகளைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் காணப்பட்ட ரூபா 349,186,269 ஆன தொகையில் 2025 ஏப்ரல் வரையில் தொடர்ந்தும் தீர்ப்பதற்காக உள்ள மீதி ரூபா 311,596,989 ஆகும். | | |
| (இ) 2024 ஆம் ஆண்டுக்கு உரியதான உரிமைக் கணக்குகளில் மூன்று அலுவலகங்களின் மாதிரிப் பரீட்சிப்பின்போது உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட எனினும் 2025 மே மாதம் வரையிலும் கொழும்பு மத்தி, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு தெற்கு அலுவலகங்களில் முறையே ரூபா 1,539,544 , ரூபா 222,740 மற்றும் ரூபா 403,600 எனும் ரீதியில் மீதிகள் கொடுப்பனவிற்காகக் காணப்பட்டன. | உரிய தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படும் என்பது. | -மேற்படி- |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரே கூரையின் கீழ் அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் 2008 மே 12 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் அங்கத்தவர்களைப் பதிவு செய்தல் தொடக்கம் அங்கத்துவக் கட்டணம் செலுத்தத் தவறும் முதலாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல், அங்கத்தவர்களின் பிரதி பலன்களைப் பெற்றுக் கொள்வதனை இலகுபடுத்தும் ஊழியர் சேமலாப நிதிய செயலாளர் அலுவலகம், மத்திய வங்கி | தொழில் தருநர் மற்றும் ஊழியர் ஆகிய இருதரப்பினருக்கும் உரிய சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்கும் நோக்கில் மெஹவர பியச கட்டடத்தினை நிர்மாணிப்பதற்கு யோசனை தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்தப் பணியினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது தொழில் திணைக்களத்தின் அல்லது தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு காணப்பட்டதால் ஆகும் என்பது. | அங்கத்தவர்களுக்குப் பலன்களை வழுங்குதலுக்குத் தேவையான நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களைக் கொண்ட நிர்வாக அலகு, வழக்குகளை விசாரிப்பதற்கு நீதவான் நீதிமன்றம், கலந்துரையாடல் மண்டபம், உணவகம் என்பவற்றுக்கான இடவசதியினை ஒதுக்கி கொடுக்கும் செயற்பாடு பியச கட்டட நிர்மாணத்தின் நோக்கமான போதிலும், அந்தப் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எனினும் 2024 திசெம்பர் வரையில் தொழிலாளர் விடயப் பரப்பிற்கு நேரடியாக உரித்தல்லாத உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (24, 25 ஆம் மாடிகள்) அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (26, 27 ஆம் மாடிகள்) குத்தகைக் வாடகை அறவிடப்படாது பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |

## 4.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொக்கல மற்றும் கட்டுநாயக்க விடுதிகளின் திருத்த வேலைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 6,000,000 நிதியும் மீளாய்வாண்டில் ரூபா 2,500,000 நிதியும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்பது. | நிதி ஒதுக்கப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டில் மெஹவர பியச கட்டடத்தின் 16 ஆவது மாடியில் உள்ளகப் பிரிவுகளை அமைப்பதற்காக ரூபா 30,000,000 மதிப்பீட்டு நிதி | 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்பது. | செயற்திட்டங்கள் தாமதமின்றி செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 36,880,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. உருவாக்க செயற்பாட்டினை ஆரம்பித்தல் 2024 ஒக்டோபர் வரையில் தாமதமடைந்த காரணத்தினால் குறித்த செயற்திட்டத்தானை 2024 ஆம் ஆண்டிலும் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மெஹவர பியச கட்டடம் 2019 ஓகஸ்ட் 20 ஆம் திகதி திறக்கப்பட்டு அலுவலக நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்ட போதிலும் கழிவு முகாமைத்துவச் செயலாற்றுகை வேலைத்திட்டத்தினை 2024 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. இதற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 5,000,000 நிதியும், 2024 ஆம் ஆண்டில் ரூபா 13,000,000 ஏற்பாடு செய்யப்பட்ட நிதியும் மீதியாக இருந்தது. | இந்தப் பணிக்கு உரிய மதிப்பீட்டினை கட்டடத் திணைக்களம் தயாரித்து வருகின்றது என்பது. | கழிவு முகாமைத்துவ ஒழுங்கமைப்பினைத் தயாரிக்கும் கடமையினை மேற்கொள்ள வேண்டும். |

**4.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தின் திருத்த வேலைகளுக்காக ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டடத் திணைக்களத்துக்கு ரூபா 11,177,000 நிதி செலுத்தப்பட்டிருந்தது. ஆரம்ப மதிப்பீட்டில் கூரை மற்றும் சீலிங் திருத்த | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிற்கு உரியதாகத் தேவையான நடவடிக்கைகள் உருவாக்கப்படாமை தொடர்பில் மற்றும் திருத்த வேலை நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிந்து நிறைவேற்றிக் கொள்ளுதல் வேண்டும். |

வேலைகளுக்காக ரூபா 1,922,500 ஆன மொத்த செலவு உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன், திருத்த வேலைகளின் தன்மை ஆரம்ப மதிப்பீட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்காததுடன், பயன்படுத்தப்பட்ட பலகை, அஸ்பெஸ்டோஸ் போன்றவை தொடர்பான தெளிவான குறிப்புகள் காணப்படவில்லை. கணக்காய்வு சந்தர்ப்பமான 2024 ஓகஸ்ட் வரையிலும் மழை நிலவிய சந்தர்ப்பங்களிலும் கூரையிலிருந்து சீலிங் ஊடாக நீர் ஒழுகுதல் இடம்பெற்றதுடன், உணவருந்தும் இடத்தில் மின்விசிறியின் ஊடாக ஒழுகுகின்ற நீர் காரணமாக மின்சார துண்டிப்பு இடம்பெற்ற போதிலும் இது தொடர்பாக கட்டட திணைக்களத்திற்குத் தெரிவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற கடன் பதிவேட்டு மாதிரி பரீட்சிப்பின் போது (CC 10) ஒழுங்காகப் பேணப்படாத காரணத்தினால் 9 சந்தர்ப்பங்களில் 9 உத்தியோகத்தர்களின் கடன் மீதி சரியாகக் குறிப்பிடப்படாமல் மற்றும் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டமை உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் ஒழுங்காக மற்றும் சரியாக பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்கூட்டிய ஆய்வு மற்றும் மதிப்பீடு இன்றி 7 பொருட்கள் மற்றும் வேலை உருவாக்கல் பணிகளுக்காக ரூபா 139,270,000 நிதி ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் காணிகளில் சிக்கல்கள் காணப்பட்டமை, PPP முறைமை காரணமாக இடைநிறுத்தப்பட்டமை, டிஜிட்டல் முறைமையினை அறிமுகப்படுத்தியமை போன்ற சிக்கல்கள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் அந்த பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாது இருந்தது. | 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பணிகள் முறையான ஆய்வு மற்றும் மதிப்பீட்டின் மூலம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 7,855,576 நிதி செலவில் 2023 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் சுற்றுலா மாளிகை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தேவையான மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படாத காரணத்தால் பயன்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டது. | 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது இந்த கொள்வனவிற்காகப் போதுமான நிதியினை ஒதுக்கிக் கொள்ளுவதில் கவனம் செலுத்தப்படும் என்பது. | சொத்துக்கள் முறையாக முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஜா-எல தொழில் அலுவலகத்தினை நடத்திச் செல்வதற்கு பொருத்தமான இடத்தினை தெரிவு செய்யும்போது வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி போதுமான வகையில் இல்லாமை, ஊனமுற்றோர் நுழைவுக்குத் தேவையான வசதிகள் கவனத்தில் கொள்ளப்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் குறித்த குத்தகை ஒப்பந்தம் ஒரு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த கைச்சாத்திடப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் அட்டவணையில் குத்தகைக்கு பெறப்பட்ட இடத்தின் அளவு குறிப்பிடப்பட்டிருக்காத காரணத்தால் சட்டரீதியான | உரிய குத்தகை ஒப்பந்தத்தில் குத்தகைக்கு எடுக்கப்படும் இடத்தின் அளவினை உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது. | அலுவலக நடவடிக்கைகளை பேணிச் செல்லுவதற்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளின் போது எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு பாதகமான நிலைமை ஏற்படக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு உரிய 13 அதிகாரப் பிரதேசத்திற்கான பதிவேடுகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் தொழில் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் கணினி ஒழுங்கமைப்பின் தகவல்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் என்பவற்றுக்கு இடையே முரண்பாடுகள் காணப்பட்டன. கள கடமைகள், நீதிமன்ற கடமைகள் முறைப்பாடுகளை பரீட்சித்தல், அறிக்கைகளைப் பின்தொடர்தல், கட்டளைகளை வழங்குதல் சாராம்சத்தினைத் தயாரித்தல் மற்றும் வீட்டுக் கடன் தொடர்பான கடமைகள் என்பன முறையான நிர்வாகம் மற்றும் ஒழுங்கான முகாமைத்துவத்துடனான கணினி ஒழுங்கமைப்பு செயற்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதே போன்று இந்த அலுவலகத்தின் ஏடுகள் ஆவணங்களுக்கு அமைய நிறுவன பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கான அறிக்கை காணப்பட்ட போதிலும், கணினி ஒழுங்கமைப்பினுள் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு காணப்படவில்லை. | இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு உரித்தான 13 அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய தரவுகள் படிப்படியாகத் திருத்தப்பட்டு வருகின்றது என்பது. | கணினி ஒழுங்கமைப்பு மற்றும் தகவல்கள் சரியாக பேணப்பட்டு வருதல் வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தில் வெள்ளத்தினால் கோவைகள் சேதமடைந்ததனால் பதிவேடுகளைத் தேட | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கோவைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியாது என்பதனால் ரூபா 7,254,381 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆபத்தான சூழலில் காணப்படும் அலுவலக வளாகமாக இருந்த போதிலும் தகவல் ஒழுங்கமைப்பொன்றினைப் பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**5. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சிரேஷ்ட தரத்திலான உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 42 சதவீதமாக இருந்ததுடன் மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 25 சதவீதம் ஆகும். வெற்றிட அளவு உயர் சதவீதத்தினைக் கொண்டுள்ளதன் மூலம் நிறுவன படிநிலையில் தீர்மானம் எடுத்தல், பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் போன்ற சந்தர்ப்பங்களின் போது நடைமுறை சிக்கல்கள் ஏற்படும் என்பது அவதானிக்கப்பட்டது. | மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உருவாக்குதல் மற்றும் ஊழியர் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களம் தொழில் துறைக்கு உரியதான சுமார் 14 சட்டங்களுக்கான கடமைகள், விசாரணை நடவடிக்கைகள், நாளாந்தம் பொதுமக்கள் தொடர்பான கடமைகளில் ஈடுபடுகின்ற காரணத்தினால் முகாமைத்துவ சேவையில் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை செயல்திறனுக்கு தடையாக உள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வெற்றிடம் நிலவுகின்ற பதவிகளின் பணிகளை முகாமைத்துவப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |